(ஆ) ஆம் எனில். அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது,

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

முற்பகல் 10-40.

2. உரிமைப் பிரச்சினை.

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து 'மாலை முரசு' 5—2—1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பேரவைத் தலைவர் அளித்தத் தீர்ப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சினை பற்றிய என்னுடைய தீர்ப்புரை:

7—2—1992 அன்று திரு. வி.பி. சந்திரசேகர், எம்.எல்.ஏ., அவர்கள் 5—2—1992 தேதியிட்ட மாலை முரசு (கோவைப் பதிப்பு) பத்திரிகையில் அந்த உறுப்பினரைத் தொடர்புப் படுத்தி வெளி வந்துள்ள ஒரு செய்தி தொடர்பாக அந்தப் பத்திரிக்கையின் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார் என்றும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, அது அவை உரிமை மீறல் பிரச்சினையாக இருக்கிறது என்கிற காரணத்தினால் நேரடியாகவே அதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும், ஏன் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி உரிய நடவடிக்கை அந்தப் பத்திரிகையின் மீது எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தினை அப் பத்திரிகையிடம் கேட்டுப் பெற்று, பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன். அப்பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டதில் அவர் தனது 6—3—1992 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் விளக்கத்தினை அளித்துள்ளார்கள்:—

1992 மார்ச் 12] [பேரவைத் தலைவர்]

"தங்களின் 7–2–1992 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்று, அது எப்படியோ தவறிவிட்டபடியால், அதன் நகல் ஒன்று அனுப்பும்படி 27–2–1992-ல் கேட்டோம். அதன்படி தங்கள் கடித நகல் கிடைத்து, இந்தப் பதில் எழுத சற்று தாமதம் ஏற்பட்டு விட்டது.

5–2–1992-ல் எங்கள் நாளிதழில் வெளியிடப்பட்டு, உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ள செய்தியின் தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிகிறோம். இனி மேல் இப்படி நிகழாதவாறு பார்த்துக் கொள்ள செய்தித் துறை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பேரவைத் தலைவர் இந்தப் பிரச்சினை பற்றி அவையில் 7–2–1992-ல் குறிப்பிட்டபோது கொஞ்ச நாட்களாகவே இந்தப் பத்திரிகை சட்டமன்றச் செய்திகளைத் திரித்து வெளியிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதாகப் பல உறுப்பினர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதாகக் கருத்துத் தெரிவித்தார்கள். எந்தெந்த செய்திகள் எங்கள் பத்திரிகையில் (கோவை மாலை முரசு) திரித்து வெளியிடப்பட்டன என்பதைத் தெரிவித்தால், செய்தித் துறையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆசிரியர் தமது விளக்கத்தில் 5–2–1992 அன்று கோவை மாலை முரசு நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தியின் தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிவதாகவும், இனி மேல் இப்படி நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ள அப்பத்திரிகையின் செய்தித் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை. மேலும், தலைப்பு மிகைப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் பொள்ளாச்சி சந்திரசேகர் இளம்வழுதியின் கையில் அடித்தார் என்பது தான் உரிமைப் பிரச்சினையின் கருப் பொருளாகும். அதற்கான பதில் ஏதும் அப்பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வரப்பெறவில்லை.

அவருடைய பதிலின் மூன்றாவது பத்தியில் ''கொஞ்ச நாட்களாகவே இந்தப் பத்திரிகை சட்டமன்றச் செய்திகளைத் திரித்து வெளியிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதாகப் பல உறுப்பினர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று பேரவைத் தலைவர் 7–2–1992 அன்று பேரவையில் குறிப்பிட்டதைத் தெரிவித்து எந்தெந்தச் செய்திகள் அவர்கள் பத்திரிகையில் திரித்து வெளியிடப்பட்டன என்பதைத் தெரிவித்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்று ஆசிரியர் கேட்டுள்ளது அவர்கள் விளக்கம் அளிப்பதற்குப் பதிலாக பேரவைத் தலைவரையே விளக்கம் கேட்பது போல் உள்ளது.

[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 12

தலைப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இப்பத்திரிகை ஆசிரியரே ஒப்புக் கொண்டுள்ள நிலையில் அதற்காக வருத்தமோ மன்னிப்போ கோராது, அப்பத்திரிகையின் செய்தித் துறை இனிமேல் இவ்வாறு நிகழாது பார்த்துக் கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளதென விளக்கம் அளித்துள்ளது பேரவையின் உரிமையைக் குறைத்து மதிப்பிட்டதாகவே கருதுகிறேன்.

எனவே, உரிமைப் பிரச்சினையின் முக்கியப் பகுதிக்குப் பதில் அளிக்காததும், ஏற்பட்ட தவறுக்கு வருத்தமோ மன்னிப்போ கோராமல் இருப்பதும், பேரவைத் தலைவர் அவர்களையே கேள்வி கேட்பது போல் பதில் அளித்திருப்பதுமான காரணங்களாலும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இதில் உரிமை மீறல் இருப்பதாகக் கருதுவதாலும், பேரவை விதி 226-ன் கீழ் விசாரித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கா.ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 5-வது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. வரவு - செலவுத் திட்டம், 1992–93—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். இன்றைய தினம் உறுப்பினர்கள் பேசுவதற்கான கடைசி நாளாகும். நாளைய தினம் கட்சித் தலைவர்கள். அதையடுத்து எதிர்க் கட்சித் தலைவர், அதன் பின் நிதியமைச்சர் பதிலுரை என்பதற்காக ஒதுக்கப்பட்ட நாளாகும். எனவே இன்றைக்கு ஏறத்தாழ 20 உறுப்பினர்கள் பேசி முடிக்க வேண்டியுள்ளது. அதையும் கவனத்தில்கொண்டு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்கு எந்த வகையிலேயும் மேற்செல்லாமல் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. வி. தண்டாயுதபாணி.